// தேர்வுகள் // // தனி கவனம் //

வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண் 300 / ஆ4 / 2021 நாள் 01– 02–2021

பொருள் தேர்வுகள் – வேலூர் மாவட்டம் – 2020–2021ம் கல்வியாண்டிற்கான மேல்நிலை பொதுத் தேர்வு – முதலாமாண்டு மற்றும் இரண்டாமாண்டு – புதிய தேர்வு மையங்கள் அமைக்க கருத்துருக்கள் மற்றும் இணைப்பு பள்ளிகள் மாற்றம் கோரும் கருத்துருக்கள் அனுப்ப கோருதல் சார்பு.

பார்வை சென்னை அரசுத் தேர்வுகள் இயக்கக தொலைபேசி செய்தி நாள் 01–02–2021

•••••

பார்வையில் காணும் சென்னை அரசுத் தேர்வுகள் இயக்கக தொலைபேசி செய்திக்கிணங்க 2020–2021ம் கல்வியாண்டிற்கான **மேல்நிலை முதலாமாண்டு மற்றும் இரண்டாமாண்டு** பொதுத் தேர்வுக்குரிய புதிய தேர்வு மையங்கள் அமைத்தல் மற்றும் இணைப்பு பள்ளிகளில் மாற்றம் தேவைப்படுவோர் உரிய கருத்துருக்கள் இத்துடன் இணக்கப்பட்டுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ள அறிவுரைகளை பின்பற்றி உரிய படிவத்தில் பூர்த்தி செய்து இரு நகல்களில் 02–02–2021 அன்று மாலை 04.00 மணிக்குள் வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலகத்தில் ஆ4 பிரிவு எழுத்தரிடம் நேரில் ஒப்படைக்கப்படவேண்டும் என அனைத்து மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளி முதல்வர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

02–02–2021 ற்கு பிறகு பெறப்படும் கருத்துரு ஏற்கப்படமாட்டாது என திட்டவட்டமாக தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு

1. படிவங்கள் அ, ஆ
2. அரசாணை நகல்

முதன்மைக் கல்வி அலுவலர்
வேலூர்.

பெறுநர்

அனைத்து மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்கள்
மற்றும் மெட்ரிக் பள்ளி முதல்வர்கள்

நகல்
மாவட்டக் கல்வி அலுவலர் வேலூர் அவர்களுக்கு தகவலுக்காகவும் தொடர் நடவடிக்கைக்காகவும் அனுப்பப்படுகிறது.

**<u>மேல்நிலை பொதுத் தேர்வுகள் – 2021</u>**

**<u>பிற்சேர்க்கை – ''அ''</u>**

**<u>புதிய தேர்வு மையம் – கோரும் விண்ணப்பம்</u>**

| | | | |
|---|---|---|---|
| 1. | புதிய தேர்வு மையம் கோரும் பள்ளியின் எண் & பெயர் | | |
| 2. | அங்கீகாரம் நடப்புக் கல்வி ஆண்டிற்கு உள்ளது என்பதற்கான ஆணை நகல் இணைக்கப்பட வேண்டும் | | |
| 3. | நடப்புக் கல்வி ஆண்டிற்கான ( ஏப்ரல் 2021 வரை) கட்டிட உறுதி மற்றும் உரிமச்சான்றின் நகல் இணைக்கப்படவேண்டும். | | |
| 4. | வருவாய் மாவட்டம் | | |
| 5. | கல்வி மாவட்டம் | | |
| 6. | அ) நகர்புற பள்ளி / கிராமப்புற பள்ளி | | |
| | ஆ) அரசுப்பள்ளி / தனியார் பள்ளி / சுயநிதி பள்ளி | | |
| 7. | பள்ளியின் முழு முகவரி (அஞ்சல் குறியீட்டு எண்ணுடன்) | | |
| 8. | பள்ளியின் தொலைபேசி எண். | | |
| 9. | பள்ளியில் பயிலும் +1 மற்றும் +2 மாணவர்களின் எண்ணிக்கை | +1 வகுப்பில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை | +2 வகுப்பில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை |
| | ஆண்: | | |
| | பெண்: | | |
| | மொத்தம்: | | |
| 10. | இடவசதி (மாணவர்கள் எண்ணிக்கையில்) | | |
| 11. | இருக்கை வசதி (மாணவர்கள் எண்ணிக்கையில்) | | |
| 12. | பள்ளியிலுள்ள மொத்த வகுப்பறைகள் | | |
| 13. | மாற்றுத் திறனாளி மாணவர்களுக்கான அனைத்து வசதிகளும் (இருக்கை, கழிவறை போன்ற வசதிகள்) உள்ளனவா? | | |

| | | |
|---|---|---|
| 14. | தேர்வு மையத்திற்கு பரிந்துரைக்கப்படும் பள்ளியின் மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் தேர்வுப் பணியில் ஈடுபடும் அனைவரது உயிர் மற்றும் உடமைகளுக்கு ஊறு விளைவிக்கக் கூடிய அமைப்புகள் ஏதும் இல்லை என்பது உறுதி செய்யப்பட்டதா? | |
| 15. | தேர்வு நடைபெறும் சமயத்தில் கட்டிடப் பணி ஏதும் நடைபெறும் சூழல் இல்லை என்பது உறுதி செய்யப்பட்டதா? | |
| 16. | பத்தாம் வகுப்பு தேர்வு மையமாக எந்த ஆண்டிலிருந்து செயல்படுகிறது? | |
| 17. | இப்பள்ளி மார்ச் 2020 மேல்நிலைத் தேர்வெழுதிய தேர்வு மையத்தின் எண், பெயர் மற்றும் அங்கு தேர்வெழுதிய (இணைப்புப் பள்ளிகளுடன் சேர்த்து ) மாணவர்களின் எண்ணிக்கை விவரம் **(பழைய தேர்வுமைய தலைமையாசிரியரின் தடையின்மைச் சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும்)** | |
| வ. எண் | தேர்வு மையம் /<br>இணைப்பு பள்ளியின் பெயர் | மாணவர்களின் எண்ணிக்கை |
| | | |
| 18. | புதிய தேர்வு மையம் கோரும் பள்ளிக்கும், அப்பள்ளி மார்ச் 2020 மேல்நிலைத் தேர்வெழுதிய தேர்வு மையத்திற்கும் இடைப்பட்ட தூரம் | |
| 19. | புதிய தேர்வு மையம் கோரும் பள்ளியுடன் இணைய விருப்பம் தெரிவித்துள்ள இணைப்புப் பள்ளிகள் விவரம் **(இணைப்புப் பள்ளி தலைமை ஆசிரியரின் இசைவுக் கடிதம் இணைக்கப்பட வேண்டும்)** | |

| இணைப்பு பள்ளியின் பெயர் | நடப்புக் கல்வி ஆண்டில் +1 மற்றும் +2 பயிலும் மாணவர்கள் எண்ணிக்கை | | ஏற்கனவே தேர்வெழுதிய மையத்தின் பெயர் (+2) | பழைய தேர்வு மையத்தில் மார்ச் 2020–ல் (+2) தேர்வெழுதிய பள்ளிகளின் பெயர் மற்றும் தேர்வெழுதிய மொத்த மாணவர்களின் எண்ணிக்கை | பழைய மையத்தின் தூரம் | தற்போது இணைக்கப் படும் மையத்திற் கிடையே உள்ள தூரம் |
|---|---|---|---|---|---|---|
| | +1 | +2 | | | | |
| | | | | | | |

| | | |
|---|---|---|
| 20. | புதிய தேர்வு மையம் அமைக்கப்பட்டால், அப்பள்ளி ஏற்கனவே +2 தேர்வெழுதிய பழைய தேர்வு மையத்தில், 2021 மேல்நிலைத் தேர்வினை எழுதும் மாணவர்களின் விவரம் (பள்ளி வாரியாக) | |
| வ. எண் | தேர்வு மையம் / இணைப்பு பள்ளியின் பெயர் | மாணவர்களின் எண்ணிக்கை |
| | | |
| 21. | தலைமையாசிரியரின் குறிப்புரை (கையொப்பத்துடன்) | |
| 22. | முதன்மைக் கல்வி அலுவலரால் புதிய தேர்வுமையம் கோரும் பள்ளி பார்வையிடப்பட்ட நாள். | |
| 23. | புதிய தேர்வு மையம்  அமைக்க முதன்மைக் கல்வி அலுவலர் பரிந்துரைப்பதற்கான காரணம் | |

முதன்மைக் கல்வி அலுவலரின்
கையொப்பம்

**<u>பிற்சேர்க்கை – “ஆ”</u>**

**வருவாய் மாவட்டத்தின்** பெயர் **:** **கல்வி மாவட்ட எண் & பெயர்:**

| வ.எண் | புதிய தேர்வு மையம் கோரும் பள்ளியின் பெயர், பள்ளி விவரம் (அரசு /தனியார்/ சுயநிதி) **மற்றும்** பள்ளி அமைவிடம் (கிராமம்/ நகரம்/ மலைப்பகுதி) | **இட வசதி / இருக்கை வசதி** | புதிய தேர்வு மையம் கோரும் பள்ளியில் தேர்வு எழுதுவோர் எண்ணிக்கை | | | | **புதிய தேர்வு மையத்துடன் இணைக்கப்படும்** | | | **புதிய தேர்வு மையம் கோரும் பள்ளி** | | **புதிய தேர்வு மையம் கோரும் பள்ளிக்கும், பழைய தேர்வு மையத்திற்கும் இடைப்பட்ட தூரம்** | **புதிய தேர்வு மையம் கோருவதற்கான காரணம்** |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | **வகுப்பு** | ஆண்கள் | பெண்கள் | மொத்தம் | பள்ளிகளின் பெயர் | +1 மற்றும் +2 மாணவர்களின் எண்ணிக்கை | மையத்திற்கும், இணைப்புப் பள்ளி/ பள்ளிகளுக்கும் இடையேயான தூரம் | தேர்வு எழுதிய தேர்வு மையத்தின் பெயர் | அங்கு தேர்வெழுதிய மொத்த மாணவர்களின் எண்ணிக்கை **(இணைப்புப் பள்ளிகள் உட்பட)** | | |
| | | | +1 | | | | | | | | | | |
| | | | +2 | | | | | | | | | | |

**முதன்மைக் கல்வி அலுவலரின் கையொப்பம்**

**சுருக்கம்**

பள்ளிக்கல்வி – அரசுத் தேர்வுகள் இயக்ககம் – இடைநிலை / மேல்நிலைப் (முதலாமாண்டு மற்றும் இரண்டாமாண்டு) பொதுத் தேர்வுகள், புதிய தேர்வு மையங்கள் அமைத்திட அனுமதி வழங்கி – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பள்ளிக்கல்வி(ஜிஇ.1)த் துறை**

அரசாணை (1டி) எண்.602

நாள் : 11.10.2017.
திருவள்ளுவர் ஆண்டு , 2048
ஹேவிளம்பி வருடம், புரட்டாசி 25,

படிக்கப்பட்டவை :-

1. தமிழ்நாடு அரசாணை எண்.641, கல்வி, அறிவியல் & தொழில்நுட்ப துறை, நாள்.08.04.82.
2. அரசாணை (நிலை) எண்.100, பள்ளிக் கல்வி (அ.தே.1)த்துறை, நாள்.22.05.2017.
3. அரசுத் தேர்வுகள் இயக்குநரின் கடித ந.க. எண்.160072/ எச்.1/2017, நாள். 04.10.2017

-----

**ஆணை:**

மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் ஒவ்வொரு வருடமும் உள்கட்டமைப்பு வசதிகள் உள்ள பள்ளிகளில் தேர்வு மையம் அமைப்பது அவசியம் என்ற நிலை இருந்தால், இடைநிலைத் தேர்விற்கு வருவாய் மாவட்டத்திற்கு மூன்று அல்லது நான்கு புதிய தேர்வு மையங்களும் மேல்நிலைப் பொதுத் தேர்விற்கு 2 புதிய தேர்வு மையங்களும் அமைக்க அரசுத் தேர்வுகள் இயக்குநருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக, புதிய தேர்வு மையம் கோரும் பள்ளியில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை, அப்பள்ளியில் உள்ள இட/இருக்கை வசதி, பள்ளி அங்கீகாரம், மாணவர்கள் தேர்வு மையத்திற்கு பயணம் செய்யும் தொலைவு, இணைப்புப் பள்ளி, பழைய தேர்வு மையத்தில் தேர்வெழுதும் மாணவர்களின் எண்ணிக்கை ஆகியவற்றின் அடிப்படையில் புதிய தேர்வு மையங்கள் அமைக்க தேர்வுகள் துறை இயக்குநர் மட்டத்தில் அனுமதி வழங்கப்பட்டு வந்தது.

2. இத்னைத் தொடர்ந்து மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் 2017–2018–ம் ஆண்டிலிருந்து மேல்நிலை முதலாம் ஆண்டு மாணவர்களுக்கும் மாநில அளவில் அரசு பொதுத் தேர்வுகள் நடத்தப்படும் என ஆணை வழங்கப்பட்டுள்ளது.

3. இதனைத் தொடர்ந்து மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசுத் தேர்வுகள் இயக்குநரின் கடிதத்தில், புதிய தேர்வு மையங்கள் அமைத்திட, தற்பொழுது உள்ள பள்ளிகளில் +1 பயிலும் மாணவர்கள் எண்ணிக்கை, ஏற்கனவே உள்ள +2 தேர்வு மையத்திலேயே +1 தேர்வு மையமும் அமைக்கப்பட்டால், மாணவர்கள் பயணம் செய்ய வேண்டிய தொலைவு குறித்து ஆய்வு செய்ததில், மாணவர்கள் 10கி.மீக்கும் அதிகமான தூரம் பயணம் செய்து தேர்வெழுத வேண்டிய நிலை உள்ளது என்றும், இந்த ஆண்டு முதல் 11 ஆம் வகுப்பிற்கும் மாநில அளவில்

பொதுத் தேர்வு நடத்தப்பட வேண்டும் என்பதாலும், அதன் பொருட்டு அதிக எண்ணிக்கையில் தேர்வு மையங்கள் அமைக்க வேண்டிய அவசியம் இருப்பதாலும், விரிவான வழிகாட்டு நெறிமுறைகளுடன் அரசாணை பெறுவது அவசியமாகிறது என தெரிவித்துக் கொண்டு புதிய தேர்வு மையங்கள் அமைத்திட அரசாணை வழங்குமாறு அரசுத் தேர்வுகள் இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. அரசுத் தேர்வுகள் இயக்குநரின் செயற்குறிப்பு அரசால் ஆய்வு செய்யப்பட்டது. அதனடிப்படையில், 2018 முதல், 11–ஆம் வகுப்பிற்கும் மாநில அளவில் பொதுத் தேர்வு நடத்தப்பட வேண்டும் என்பதால் அதிக எண்ணிக்கையில் தேர்வு மையங்கள் அமைக்க வேண்டிய அவசியம் இருப்பதாலும், கீழ்க்கண்ட வழிகாட்டி நெறிமுறைகளின்படி, புதிய தேர்வு மையங்கள் அமைத்திடக் கருதி அரசு அவ்வாறே ஆணையிடுகிறது :–

(i) 10, 11 மற்றும் 12–ம் வகுப்பு பொதுத் தேர்வுகளுக்கு புதிய மையம் அமைக்கக் கோரும் பள்ளிக்கு சம்பந்தப்பட்ட மாவட்டக் கல்வி அலுவலர்கள் / முதன்மைக் கல்வி அலுவலர்கள் நேரிடையாகச் சென்று பார்வையிட்டு, அப்பள்ளி தேர்வு மையமாக செயல்படுவதற்கான உள்கட்டமைப்பு வசதியும் ( இட/ இருக்கை வசதி, கழிவறை வசதி உள்ளிட்டவை), மாணவர்கள் மற்றும் ஆய்வு அலுவலர்கள் எளிதில் வந்து செல்லக்கூடிய வசதியும் உள்ள பள்ளியாக இருந்து புதிய தேர்வு மையம் அமைக்க அவசியம் இருப்பின் பரிந்துரை செய்ய வேண்டும்.

(ii) தோராயமாக 10 கி.மீ தொலைவு பயணம் செய்து பொதுத்தேர்வெழுதும் மாணவர்களுக்கு புதிய தேர்வு மையம் அமைக்கலாம்.

(iii) புதிய தேர்வு மையம் கோரும் பள்ளி அரசு அங்கீகாரம் பெற்ற பள்ளியாக (தொடர் அங்கீகாரத்தில்) இருக்க வேண்டும். மாணவர்கள் தேர்வெழுதும் (Feb-April) நாளில் பள்ளியின் தொடர் அங்கீகாரம் முடிவு பெறாமலும், முடிவு பெற்ற நிகழ்வுகளில் தொடர் அங்கீகாரம் புதுப்பிக்கப்பட்டும் இருக்க வேண்டும்.

(iv) புதிய மையமாக அமைக்கப்படும் பள்ளியில் தேர்வெழுதும் மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப 20 பேர் அமரக்கூடிய இட வசதியுள்ள அறைகள் (20''x20'') மற்றும் இருக்கை வசதிகள் இருத்தல் வேண்டும்.

(v) ஏற்கனவே தேர்வு மையமாக செயல்பட்டு வரும் பள்ளியில் தேர்வெழுதும் மாணவர்களின் எண்ணிக்கை, தேர்வு பணிகளைக் கையாள்வதில் மிகுந்த சிரமத்தினைக் கொடுக்கும் (Unmanageable) நிலையில் இருக்குமேயானால், அதில் இணைப்பு பள்ளியாக செயல்பட்டு வரும் ஏதேனும் ஒரு பள்ளியில், குறைந்தபட்சம் 100–மாணவர்கள் பயின்று, அப்பள்ளி புதிய தேர்வு மையம் வேண்டி விண்ணப்பித்தால், அப்பள்ளியில் இட/இருக்கை வசதிகளைச் சரிபார்த்தபின், அவை சரியாக இருக்கும்பட்சத்தில் புதிய மையம் வழங்கப் பரிந்துரைக்கலாம்.

(vi) புதிய தேர்வு மையத்தில் இணைப்பு பள்ளி கண்டிப்பாக இருக்க வேண்டும். தவிர்க்க முடியாத சூழ்நிலையில் அரசுப் பள்ளிகள் மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கு மட்டும் விதிவிலக்கு தரப்படலாம். இந்நிகழ்வுகளில் தேர்வு மையத்தில் அவசியம் நிலையான பறக்கும் படையினர் (Standing Squad) நியமிக்கப்பட்டு, தீவிரக் கண்காணிப்பில் தேர்வுகள் நடத்தப்பட வேண்டும்.

த.பி.பா.

5. புதிய தேர்வு மையம் கோரும் பள்ளிகள் மந்தணத் தன்மைக்கு ஊறுவிளைவிக்காத வகையில் பாதுகாப்பானதாகவும், நேர்மையான முறையில் தேர்வுகளை நட்த்துவதற்கு ஏதுவான வசதிகள் மற்றும் இணைப்புப் பள்ளிகளை கொண்டதாகவும் இருப்பதை சம்பந்தப்பட்ட மாவட்டக் கல்வி அலுவலர்கள் / முதன்மைக் கல்வி அலுவலர்கள் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

பிரதீப் யாதவ்
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
அரசுத் தேர்வுகள் இயக்குநர், சென்னை–6.
பள்ளிக்கல்வி இயக்குநர், சென்னை–6.
தொடக்கக்கல்வி இயக்குநர், சென்னை–6.
மெட்ரிக்குலேஷன் பள்ளிகள் இயக்குநர், சென்னை–6.
நகல் :
பள்ளிக்கல்வித் துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.
12/10/17

ந.க.எண். 160072/HF1/2017, நாள். 24.10.2017

மேற்குறிப்பு

அரசாணை (டி) எண். 602, பள்ளிக் கல்வி (ஜிசி) த்துறை, நாள். 22.10.17-ன் நகல் தகவலுக்காகவும், தக்க நடவடிக்கைக்காகவும் வழங்கப்படுகிறது.

இணை இயக்குநர் (மேல்நிலை)

பெறுநர்
- அனைத்து அரசுத்தேர்வுகள் மண்டலத் துணை இயக்குநர்கள்.
- அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்.
- அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்.
- HS, SS, HPA, H[illegible], BT பிரிவுகள் [illegible]